2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(உ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதாவை இப்பேரவைக்கு அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவை அளித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதா

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, இம்மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

பேரவை நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று திங்கட்கிழமை மார்ச் 30-ஆம் தேதி காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

8. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

@ 179. Notification issued with G.O. Ms. No. 319, Rural Development and Local Administration, dated the 25th February, 1969 in regard to extension of term of office of the Councillors of all municipal councils upto the noon of the 28th day of April 1969. [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Tamil Nadu District Municipalities Act*, 1920 (*Tamil Nadu Act, V of* 1920).]

@ 180. Notification issued with G.O. Ms. No. 2743, Revenue, dated the 19th November, 1969 in regard to certain amendments to the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Rules, 1965, published at pages 26 to 63 of Part V of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 15th February 1965, as subsequently amended. [*Laid on the Table of the House under section* 73 (5) *of the Tamil Nadu Inam Estates* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1963 (*Tamil Nadu Act* 26 *of* 1963).]

@ Laid on the Table of the House on 26-3-1970.